பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 01 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனைத்துத் துறைகளிலும் பெண் குழந்தைகளின் சாதனைகளால் நாடு பெருமிதம் அடைவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. ஆழ்கடல் ஆய்வுக்காக மனிதர்களால் இயக்கப்படும் நீர்மூழ்கி சாதனம் இந்த ஆண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.
3. நாட்டில் ஒலிபரப்பு கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்கால் - ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப் படுவதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக பெண் குழந்தைகள் உரிமைகள், கல்வி, ஆரோக்கியம் மற்றும் சமுதாயத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு குறித்து அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் கல்வி, தொழில்நுட்பம், திறன்மேம்பாடு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

பெண் குழந்தைகளுக்கு எதிராக எவ்வித பாகுபாடும் காட்டப்படாமல் இருப்பதை அரசு உறுதி செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் துறைகளிலும் பெண் குழந்தைகளின் சாதனைகளால் நாடு பெருமிதம் அடைவதாகவும், அவர்களது சாதனைகள் அனைவருக்கும் ஊக்கம் அளிக்கும் என்றும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அனைத்து பெண் குழந்தைகளையும் மரியாதையுடன் நடத்துவது, அவர்களது வளர்ச்சி, கல்வி போன்றவற்றில் சம வாய்ப்புகளை உறுதி செய்வது குறித்தும் இந்நாளில் எடுத்துரைக்கப்படுகிறது.

பெண் சிசுக்கொலை, குழந்தை திருமணம், பாலின பாகுபாடுகளைக் களைவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன், பெண் குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், சமுதாயத்தில் பெண்களுக்கான சம உரிமையை மேம்படுத்துவதை வலியுறுத்தும் நோக்கத்துடன் இந்நாள் கொண்டாடப்படுவதாகக் கூறியுள்ளார்.

தங்களுக்கு கிடைக்கப்பெற்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சியிலும், கல்வி மற்றும் பிற துறைகளிலும் பெண்கள் பெரும் பங்காற்றுவதாக திரு எல் முருகன் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநில நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தில் உத்திரபிரதேச மாநிலம் முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அம்மாநிலம் தொடர்ந்து ஒட்டுமொத்த வளர்ச்சிப்பாதையில் முன்னேறிச் செல்லும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், புண்ணிய பூமியான உத்திரபிரதேசம் இந்திய கலாச்சாரத்தின் எண்ணற்ற புராண மற்றும் வரலாற்று காலங்களை கொண்டதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

கடந்த எட்டு ஆண்டுகளில் அம்மாநிலம் வளர்ச்சியில் புதிய அத்தியாயங்களை படைத்து வருவதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளர்.

[]<<<>>>[]

ஆழ்கடல் ஆய்வுக்காக மனிதர்களால் இயக்கப்படும் நீர்மூழ்கி சாதனம் இந்த ஆண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இத்திட்டம் தொடர்பான இரண்டாவது ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், இந்த நீர்மூழ்கி சாதனம் 500 மீட்டர் ஆழம் வரை சென்று ஆய்வில் ஈடுபடும் வகையில் வடிவமைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஆறாயிரம் மீட்டர் ஆழம் வரை செல்லக்கூடிய சாதனங்கள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம் அரிய தாதுக்கள் உள்ளிட்ட ஆழ்கடல் வளங்கள் குறித்து ஆராயப்படுவதுடன், ஆழ்கடல் சூழலியல் மற்றும் இந்தியாவின் நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று திரு ஜிதேந்திரசிங் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாட்டில் ஒலிபரப்பு கட்டமைப்பை மேம்படுத்தி வலுப்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் சிவமொக்கா தூர்தர்ஷன் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அகில இந்திய வானொலியின் பத்ராவதி நிலையத்தில் பத்து கிலோவாட் டிரான்ஸ்மீட்டர் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வானொலி மற்றும் தூர்தர்ஷன் கட்டமைப்பு விரிவாக்க பணிகளுக்காக கடந்த ஆண்டு இரண்டாயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பண்டைய கலாச்சாரம், உள்ளூர் பாரம்பரியம் மற்றும் அந்தந்த பகுதிகளில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளை பாதுகாப்பதில் வானொலி மற்றும் தூர்தர்ஷன் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் சென்றுள்ள தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து பல்வேறு சர்வதேச நிறுவனங்ளின் நிர்வாகிகளை சந்தித்து விவாதித்தார்.

என் டி டி டேட்டா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு அபிஜித் துபே மற்றும் பிளாக்ராக் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு ராஜ்ராவ் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினார்.

பின்னர் திரு அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ரயில்வே விரிவாக்கம், பொது கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து கலந்துரையாடியதாகக் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இனி கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - song - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவையொட்டி திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் நாட்டின் சனாதன பாரம்பரியத்தை எடுத்துக்கூறும் விதமாக மூன்று நாள் கண்கவர் ட்ரோன் காட்சிகள் இன்று தொடங்குகிறது.

இந்திய கலாச்சாரத்தை தனித்துவமான முறையில் விளக்கும் இந்த ட்ரோடன் காட்சியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இரண்டாயிரத்து 500 ட்ரோன்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

திரிவேணி சங்கமத்தையொட்டிய பகுதிகளில் அமிர்த கலசத்திலிருந்து அமிர்தம் சொட்டியதை நினைவுகூறும் விதமான ட்ரோன் காட்சிகள் இடம்பெற உள்ளதாக நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

*(சவுண்ட் பைட் - song - 8 நொடிகள்)*

[]<<<>>>[]

தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பெண் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) –36 செகண்ட்*

[]<<<>>>[]

நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் 135 மருந்து பொருட்கள் உரிய தரத்தில் இல்லை என்பது பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை கூறியுள்ளது.

மத்திய மாநில அரசுகளின் மருந்து பரிசோதனைக் கூடங்களில் கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

எனினும் தற்போது சந்தையில் விற்பனையில் உள்ள பிற மருந்து பொருட்கள் பற்றி அச்சப்படத் தேவையில்லை என்றும் மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதுபோன்ற தரமற்ற மருந்துகள் சந்தையிலிருந்து அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மத்திய பிரதேசத்தில் முதல்கட்டமாக முக்கிய வழிபாட்டு தலங்கள் அமைந்துள்ள 17 இடங்களில் மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் அறிவித்துள்ளார்.

நர்ஸிங்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ராமபிரான் மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் தடம் பதித்த இடங்களில் இந்த தடை அமலுக்கு வரும் என்றார்.

ராமர் மற்றும் கிருஷ்ணர் சார்ந்த புண்ணிய தலங்களை மேம்படுத்தும் நோக்கில் இந்த முடிவு மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மற்றும் வடமாநிலங்களின் பல்வேறு இடங்களில் நேற்று இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் நான்கு புள்ளி எட்டாக பதிவானது.

எனினும் உயிருக்கோ, உடைமைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் மியான்மர் நாட்டின் பூமியின் மேற்பரப்பிலிருந்து 106 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் பல பகுதிகளில் உணரப்பட்டதாக உள்ளூர் மக்கள் கூறியுள்ளனர்.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்கால் - ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி இன்று கேரளா அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.